## 43. அறிவுடைமை

421. *அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும்*
*உள்ளழிக்க லாகா அரண்*

**"அறிவு" - அழிவு வராமல் பாதுகாக்கும்**
**அரண் ! குற்றம் தடுத்துக் காக்கும்**
**படை ! பகையால் அழிவு வராமலும்**
**பகைவரால் ஊக்கம் அழிக்க முடியாத அரண் !**

422. *சென்ற இடத்தாற் செலவிடா தீதொரீஇ*
*நன்றின்பா லுய்ப்ப தறிவு*

**மனம் போன போக்கிலே**
**மயங்கிப் போகாமல்**
**தீய வழிகளை எல்லாம்**
**தீண்டாமல், நல்வழியின் பால்**
**தீர்க்கமாய் உய்ப்பது "அறிவு" !**

423. *எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்ப தறிவு*

**அங்ஙனம் எப்பொருளையும் யார் யார் வாய் மூலம் கேட்டாலும்**
**அதன் உண்மைப் பொருளை நன்கு**
**அறிந்து கொள்வதே "அறிவு" !**

424. *எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்*
*நுண்பொருள் காண்ப தறிவு*

**எளிமையாகக் கேட்பவர் மனதில்**
**என்றும் பதியும்படி சொல்வதும்**
**எதிர்ப்படும் பிறர் சொல்வதில்**
**எண்ணத்துக்கரிய நுட்பத்தை காண்பதும் "அறிவு" !**

425. *உலகந் தழீஇய தொட்பம் மலர்தலுங்*
*கூம்பலு மில்ல தறிவு*

**உலகத்தோடு ஒட்டித் தழுவிப் போவது நுட்பம் !**
**உண்டாகும் அந்த நுண்ணறிவு மூலம்**
**உலக வழக்கங்களை தழுவிப் போவதால்**
**உண்டாகுமே இதய இன்பம் !**

426. *எவ்வ துறைவ துலக முலகத்தோ*
*டவ்வ துறைவ தறிவு*

**எப்படி உயர்ந்தோர்கள் உலகத்தில்**
**உயர்ந்து வாழ்கிறார்களோ**
**அப்படி உலகத்தோடு ஒட்டி வாழ்வதே**
**அறிவாகும் !**

427. *அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்*
*அஃதறி கல்லா தவர்*

**அறிவுள்ளவர்கள் நடப்பதை முன்னரே**
**அறிந்து கொள்பவர்கள் !**
**அறிவில்லாதவர் அத்தகைய**
**அறிவை அற்றவர்கள் !**

428. *அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவ*
*தஞ்சல் அறிவார் தொழில்*

**அஞ்ச வேண்டியதற்கு**
**அஞ்சாமல் இருப்பது அறிவின்மை !**
**அஞ்ச வேண்டியதற்கு**
**அஞ்சுவது அறிவுடைமை !**

429. *எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை*
*அதிர வருவதோர் நோய்*

**எதிர் காலத்தில் வரக் கூடிய துன்பங்களை**
**எதிர் நோக்கி காத்துக் கொள்கிற**
**அறிவுடையவர்களுக்கு எப்போதும்**
**அதிர்ச்சி தரக்கூடிய நடுங்க வைக்கும் நோயே இல்லை !**

430. *அறிவுடையார் எல்லா முடையார் அறிவிலார்*
*என்னுடைய ரேனு மிலர்*

**அறிவு உடையவர்க்கு வேறு ஏதும்**
**அறவே இல்லையென்றாலும் அவர்**
**எல்லாம் உடையவரே ! அறிவில்லாதவர்**
**எல்லாம் இருந்தும் ஏதும் இல்லாதவரே !**

## 84. பேதைமை

**831.** *பேதைமை என்பதொன் றியாதெனின் ஏதங்கொண்*
*டூதியம் போக விடல்*

**முட்டாள்தனம் எனும் பேதைமை என்பது எதுவெனில்**
**முழுமுதற் கொண்டு கேடு தருவது எது ? –**
**முத்தாக நன்மை தருவது எது ? என**
**முதிர்ச்சியின்றித் தெளிவில்லாமல்**
**முற்றிலும் நன்மையை விடுத்துத் தீமையை நாடுவதே ஆகும் !**

**832.** *பேதைமையுள் எல்லாம் பேதைமை காதன்மை*
*கையல்ல தன்கண் செயல்*

**முட்டாள்தனத்திலெல்லாம் மிகப் பெரிய**
**முட்டாள்தனம் எதுவெனில்**
**முற்றிலும் தீமையான – ஒழுக்கமில்லாத**
**முறையற்ற காரியங்களில்**
**முழுமையாக ஆசை கொள்வது !**

**833.** *நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்*
*பேணாமை பேதை தொழில்*

**நாண வேண்டிய வெட்கக்கேடானச் செயலுக்கு**
**நாணாமலும், நன்மை தீமைகளை ஆராயந்து**
**நாடாமலும், காட்ட வேண்டிய அன்பைக்**
**காட்டாமலும் காக்க வேண்டிய பொருளைக்**
**காக்காமலும் இருப்பது பேதைகளின் இயல்பு !**

**834.** *ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்*
*பேதையிற் பேதையார் இல்*

**படிக்க வேண்டிய அனைத்து நல்ல நூல்களைப்**
**படித்தும், படித்ததை உணர்ந்தும், உணர்ந்ததைப்**
**பலருக்கு உணர்த்திடவும் செய்து**
**ஊருக்கு உபதேசம் செய்தவர் அதன்படி – தானும்**
**ஊன்றி நடக்கவில்லை எனில் அவரே**
**ஊரிலுள்ள அறிவிலிகளின் அறிவிலி !**

835. *ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்*
*தான்புக் கழுந்தும் அளறு*

**ஏன் என்று யாரிடமும் உதவி கேட்காமல்**
**ஏனோ தானோ என தன்னிச்சையாகச் செயல்படும் முட்டாள்**
**ஏழு பிறப்பிலும் அடைய வேண்டிய நரகத்தை**
**ஏகோபித்து ஒரே பிறவியில் அடைவான் !**

836. *பொய்படும் ஒன்றோ புனைபூணும் கையறியாப்*
*பேதை வினைமேற் கொளின்*

**செய்யத் தெரியாத ஒரு செயலைச்**
**செய்யத் தெரியும் என்று ஒரு முட்டாள்**
**செய்ய முனைந்தால் அது பொய்யாய் முடியும் !**
**செயலும் முடியாமல் அவனும் அடிமைத்தளையில் அகப்படுவான் !**

837. *ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை*
*பெருஞ்செல்வம் உற்றக் கடை*

**முட்டாள்களையெல்லாம் முதலாளி ஆக்கிடும்**
**'முதல்' எனும் செல்வம் சேர்ந்தால்**
**முழுமுதற் பலனையும் அடைபவர் அயலாரே !**
**முகாந்திரமுடைய உற்றார் உறவினர் பசியால் வாடுவர் !**

838. *மையல் ஒருவன் களித்தற்றாற் பேதைதன்*
*கையொன் றுடைமை பெறின்*

**மயக்கத்திலேயே இருக்கும் பித்துப் பிடித்தவன் – மேலும்**
**மயக்கம் வர கள்ளுண்டவன் போல் ஆகும்**
**மந்த புத்தி கொண்ட பேதையின் கையில் சேரும்**
**மகத்தான செல்வமானது !**

839. *பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கண்*
*பீழை தருவதொன் றில்*

**முட்டாள்களுடன் கொள்ளும் நட்பு**
**முற்றிலும் இனிமையானது ! ஏனெனில்**
**முட்டாள்களை விட்டு விட்டுப் பிரிய நேரும் போது**
**முகிழ்க்காது துன்பமே !**

840. *கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றாற் சான்றோர்*
*குழாஅத்துப் பேதை புகல்*

**அறிஞர்கள் கூடியுள்ள மன்றத்தில்**
**அறிவிலி ஒருவன் நுழைவது என்பது**
**அசுத்தத்தை மிதித்து கழுவாத காலை – படுக்கை**
**அறையில் வைத்ததைப் போன்றது !**

## 85. புல்லறிவாண்மை

*841.* *அறிவின்மை இன்மையுள் இன்மை பிறிதின்மை*
*இன்மையா வையா துலகு*

**பஞ்சங்களிலேயே மிகக் கொடுமையான**
**பஞ்சம் அறிவுப் பஞ்சம் தான் ! – மற்ற**
**பஞ்சங்களையெல்லாம் உலகம் பொருட்படுத்தாது !**

*842.* *அறிவிலான் நெஞ்சுவந் தீதல் பிறிதியாதும்*
*இல்லை பெறுவான் தவம்*

**அறிவில்லாதவன் மனம் உவந்து ஒருவனுக்கு**
**அக மகிழ்ந்து ஒரு பொருளைத் தந்தால்**
**அதற்குக் காரணம் கொள்பவனின் பேறு தான் !**

*843.* *அறிவிலார் தாந்தம்மைப் பீழிக்கும் பீழை*
*செறுவார்க்கும் செய்தல் அரிது*

**அறிவிலார் தமக்குத் தாமே செய்து கொண்டு**
**அனுபவிக்கும் துன்பத்தைப் போல்**
**அவர் தம் பகைவர்களால் கூட செய்தல் அரிது !**

*844.* *வெண்மை எனப்படுவ தியாதெனின் ஒண்மை*
*உடையம்யாம் என்னும் செருக்கு*

**"எமக்கு எல்லாம் தெரியும்" என**
**எகத்தாளமும் ஆணவமும் தான்**
**என்றும் "வெண்மை" எனும் "அறிவு முதிர்ச்சியின்மை" !**

*845.* *கல்லாத மேற்கொண் டொழுகல் கசடற*
*வல்லதூஉம் ஐயம் தரும்*

**கற்காத நூல்களையும் நன்கு**
**கற்றதாகக் காட்டிக் கொண்டால்**
**கசடறக் கற்ற துறையிலும் அவரை**
**கண்டிப்பாக உலகம் சந்தேகப்படும் !**

*846. அற்றம் மறைத்தலோ புல்லறிவு தம்வயின்
குற்றம் மறையா வழி*

**குற்றத்தை உணர்ந்து பதறி அந்தக்
குற்றத்தை நீக்க முயலாமல் மேலும் அந்தக்
குற்றத்தினால் ஏற்பட்டு விட்ட
அற்றம் எனும் அவமானத்தை மட்டும்
அழகுற மறைக்க முயல்வது என்பது
அறவிலித்தனமே !**

*847. அருமறை சோரும் அறிவிலான் செய்யும்
பெருமிறை தானே தனக்கு*

**அருமறை யான நல்வழிக்கான
அறிவுரைகளை மனதில் போற்றி
அவ்வழி நடக்காத அறிவிலிகள்
அவர்களாகவே பெருந்துன்பத்தைத் தேடிக் கொள்வார்கள் !**

*848. ஏவவுஞ் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்
போஒம் அளவுமோர் நோய்*

**"தற்குறி" எனும் "புல்லறிவாளன்"
தனக்கு நன்மையானதைத் தானும் அறிய மாட்டான்
தனக்கு மற்றவர் சொன்னாலும் கேட்க மாட்டான் அதுவே
தன் உயிர் போகும் வரை உள்ள நோய் !**

*849. காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்
கண்டானாம் தான்கண்ட வாறு*

**கண்டுணர்ந்தவன் எனக் காட்டிக் கொள்ளும்
கண்ணான நம் புல்லறிவாளனுக்குக்
கண்டுணர கற்றுக் கொடுக்க நினைக்கும்
கற்றவன் அறிவில்லாதவனாகி விடுகிறான் ! – ஆகவே
கல்லாத புல்லறிவாளனுக்கு எப்போதும் அவன்
கண்ட அளவில் அறிவானவனே !**

*850. உலகத்தார் உண்டென்ப தில்லென்பான் வையத்
தலகையா வைக்கப் படும்*

**உலகில் அறிவிற் சிறந்தவர்கள்
உண்மை என ஆராய்ந்தறிந்து
உரைப்பதை எல்லாம் பொய் என
உறுதி படக் கூறும் புல்லறிவாளன் எப்போதும்
உலகில் உலாவும் ஓர் பேய் என
உருவகப் படுத்தப் படுவான் !**